DRAF

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

# KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

DOKUMEN STANDARD KURIKULUM DAN PENTAKSIRAN

# நன்னெறிக் கல்வி ஆண்டு 6

# PENDIDIKAN MORAL

# TAHUN ENAM

# DOKUMEN STANDARD KURIKULUM DAN PENTAKSIRAN

# நன்னெறிக் கல்வி ஆண்டு 6

# PENDIDIKAN MORAL

## TAHUN 6

**Cetakan Pertama 2014**

**© Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Tidak dibenarkan keluar ulang mana-mana bahagian artikel, ilustrasi dan isi kandungan buku ini dalam apa jua bentuk dan dengan cara apa jua sama ada secara elektronik, fotokopi, mekanik, rakaman atau cara lain sebelum mendapat izin bertulis daripada Pengarah, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia, Aras 4-8, Blok E9, Kompleks Kerajaan Parcel E, Pusat Pentadbiran Kerajaan Persekutuan, 62604 Putrajaya.

# உள்ளடக்கம்

**பக்கம்**


| | |
|---|---|
| ருக்குன் நெகாரா | v |
| தேசியக் கல்வித் தத்துவம் | vi |
| முன்னுரை | 1 |
| குறியிலக்கு | 2 |
| நோக்கம் | 2 |
| கலைத்திட்ட அமைப்புக்கான அடிப்படைக் கூறுகள் | 2 |
| தர அடிப்படையிலான பயிற்றியல் கலைத்திட்டம் | 4 |
| பாடக் குவிவு | 5 |
| உள்ளடக்க அமைப்பு | 6 |
| நன்னெறிக் கல்வியின் வழி திறன்கள் ஊக்குவிப்பு | 9 |
| உயர்நிலைச் சிந்தனை திறன் | 11 |
| மதிப்பீடு | 12 |
| பள்ளி அளவிலான மதிப்பீடு | 12 |
| தர அடைவு | 13 |
| பொதுக் கட்டு விளக்கம் | 13 |
| நன்னெறிப் பாடத்திற்கான பொதுக்கட்டு விளக்கம் | 14 |
| ஆண்டு 6 உள்ளடக்கத் தரமும் தர அடைவும் | 15-28 |

# ருக்குன் நெகாரா

- இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்
- பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்
- அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்
- சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்
- நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

# தேசியக் கல்வித் தத்துவம்

மலேசியக் கல்வியானது இறை நம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து, சமன்நிலையும் இயைபும் பெற தனி மனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

**முன்னுரை**

நன்னெறிக் கல்வியானது மாணவர்களை உயர்நெறி மாந்தர்களாக அல்லது ஒழுக்க நெறியாளர்களாக உருவாக்கும் ஒரு போதனைத் திட்டமாகும். இதில் நன்னெறிச் சிந்தனை, நன்னெறி உணர்வு, நன்னெறி நடத்தை ஆகியவற்றின் வளர்ச்சி வலியுறுத்தப்படுகிறது. இப்பாடமானது சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் பங்களிக்கக்கூடிய நல்லொழுக்கமிக்க மாணவர்களை உருவாக்குகிறது.

மலேசியாவில் உள்ள பல்வேறு இனங்களின் சமயம், மரபு, பழக்க வழக்கங்களை உய்த்துணர்ந்து அமல்படுத்துவதன்வழி உள்ளாற்றலையும் உயர்நெறி பண்புகளையும் மாணவர்களிடம் விதைக்க முடியும். தொடக்கப் பள்ளி நன்னெறிக் கல்வி இத்தகைய முயற்சிகளில் கவனம் செலுத்துகிறது. நன்னெறிக் கல்வி, மாணவர்களுக்கு வாழ்க்கை வழிகாட்டியாக அமைவதோடு அவர்களை நெறியுள்ளவர்களாக உருவாக்கவும் உதவுகிறது. இதன்வழி, தங்களின் எல்லா முடிவுகளுக்கும் செயல்களுக்கும் பொறுப்புணர்வுமிக்க சமூக நன்னெறியாளர்களாக மாணவர்கள் திகழ முடியும்.

அறிவாற்றல், ஆன்மீகம், உடல், உள்ளம், சமூக உறவுகளை உள்ளடக்கிய முழுமைத்தன்மை வாய்ந்த மாந்தரை உருவாக்க சில அடிப்படைக் கோட்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை, தன்னிலையிலும் குடும்பத்திலும் பிறரிடமும் பொறுப்புணர்வோடு நடந்துகொள்ளுதல், சமய நெறிமுறைகளை உறுதியாகக் கடைப்பிடித்தல், சுற்றுச் சூழலுக்கு முக்கியத்துவம் வழங்கி அக்கறை செலுத்துதல், அமைதியும் சுபீட்சமும் கொண்ட வாழ்வை நிலை நிறுத்துதல், நாட்டுப்பற்று உணர்வு கொண்டிருத்தல், அடிப்படை மனித உரிமைகளை மதித்தல் ஆகியனவாகும்.

தேசியக் கோட்பாடு, தேசியக் கல்வித் தத்துவம் ஆகியவற்றுள் அடங்கியுள்ள எழுச்சிகளையும் எதிர்பார்ப்புகளையும் நனவாக்கும் வகையில் மேற்காணும் கோட்பாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. வளர்ச்சியடைந்த நாடு எனும் தகுதியை நோக்கிப் பீடுநடை போடும் மலேசிய நாட்டில் நன்னெறிச் சால்பு அதாவது விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் நிலையான சுபீட்சமும் சமய நெறிகளுங்கொண்ட ஒன்றுபட்ட சமுதாயத்தை உருவாக்குதல் அவசியம்.

நன்னெறிக் கல்வியானது மரபுத்திறன், ஆக்க ஆய்வுச் சிந்தனைத் திறன், சிக்கல் தீர்க்கும் திறன், சமூகத் திறன், ஆக்கத் திறன், புத்தாக்கத் திறன் ஆகியவற்றை மாணவர்கள் பெற வாய்ப்பளிக்கிறது. இன்றைய தகவல் தொழில்நுட்பத் தொடர்புத் துறை மற்றும் உலகின் புதிய நூற்றாண்டின் சவால்களை நம்பிக்கையோடும் பொறுப்புணர்வோடும் எதிர்கொள்ள இத்தகைய திறன்கள் உதவுகின்றன. மேலும், எதையும் தாங்கும் ஆற்றலையும் எவ்வித சிக்கலையும் எதிர்கொள்ளும் வல்லமையையும் பெற இத்தகைய திறன்கள் உதவுகின்றன. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்புத் துறை சாதனங்களான இணையம், மின்னஞ்சல், தொலைத்தொடர்பு அமர்வு, குறுந்தட்டு போன்றவற்றின் வழி தகவல்கள் தேடவும் பெறவும் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் தகவல்தொழில்நுட்பம் அறிந்த மலேசியச் சமுதாயத்தை உருவாக்குவதற்குத் தூண்டுகோலாக அமையும்.

**குறியிலக்கு**

நன்னெறிக் கலைத்திட்டத்தின் குறியிலக்கானது ஒழுக்க நெறியும் பொறுப்புணர்ச்சியும் கொண்ட உயர்நெறி மாந்தரை உருவாக்கி, அதன்வழி நாட்டிற்கும் உலகளாவிய சமூகத்தினருக்கும் நீடித்த அமைதியையும் நிலைத்தன்மையும் நிலைநாட்ட பங்களிப்புச் செய்தலாகும்.

**நோக்கம்**


தொடக்கப் பள்ளிக்கான நன்னெறிக் கல்வி தர கலைத்திட்டத்தின் வழி, மாணவர்கள் அடைய வேண்டிய நோக்கங்கள் பின்வருமாறு:

ii. உலகளாவிய உயர்நெறிப் பண்புகளைப் புரிதல்; உய்த்துணர்தல்;
iii. நல்ல பழக்க வழக்கங்களை உய்த்துணர்ந்து கடைப்பிடித்தல்;
iiii. குடும்பம், பள்ளி, அண்டை அயலார், சமூகம், நாடு ஆகியவற்றுடன் தனது நல்வாழ்வை நிலைநிறுத்த சமூக நன்னெறிக் கடமையை நிறைவேற்றுதல்;
iiv. ஒன்றைச் சீர்தூக்கிப் பார்ப்பதிலும் முடிவெடுப்பதிலும் நன்னெறிச் சிந்தனை, நன்னெறி உணர்வு, நன்னெறி நடத்தை ஆகியவற்றை மேம்படுத்தி நடைமுறைப்படுத்துதல்.

**கலைத்திட்ட அமைப்புக்கான அடிப்படைக் கூறுகள்**

கலைத்திட்ட அமைப்பு, பகுத்தறிவு பெற்ற மற்றும் திறமையான மனித மேம்பாட்டை உருவாக்கப் பரிந்துரைக்கிறது. இக்கலைத்திட்டத்தின் அடிப்படைக் கூறுகள் உடல், உள்ளம், ஆன்மீகம், அறிவாற்றல் கொண்ட சமன்நிலையிலான மனிதர்களை உருவாக்க ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இந்த அடிப்படைக் கூறுகளில் உள்ள முக்கிய அம்சங்கள் பின்வருவனவற்றில் பிரதிபலிக்கின்றன.

1.தொடர்பு
2.ஆன்மீகம், நடத்தை மற்றும் பண்புக்கூறு
3.மனிதவியல்
4.அறிவியல் தொழில்நுட்ப அறிவு
5.உடலும் முருகுணர்ச்சியும்
6.சால்புடைமை




**விளக்கப் படம் 1 : கலைத்திட்ட அமைப்புக்கான அடிப்படைக் கூறுகள்**

**தர அடிப்படையிலான பயிற்றிய கலைத்திட்டம்**

தொடக்கப் பள்ளிக்கான கலைத்திட்டம் மாணவர்கள் அடையவேண்டிய உள்ளடக்கத் தர மற்றும் கற்றல் தர கூற்றுகளைக் கொண்டுள்ளது.

**உள்ளடக்கத் தரம்**


வரையறுக்கப்பட்ட பள்ளி கால அளவில் மாணவர்கள் கல்வி சம்பந்தமான அறிவு, திறன் மற்றும் பண்பு ஆகிய கூறுகளை உள்ளடக்கிய கூற்றினைப் பற்றித் தெரிந்து கொள்வதையும் அதன்படி இயங்குவதையும் உறுதிப்படுத்துவதே உள்ளடக்கத் தரமாகும்.

**கற்றல் தரம்**

ஒவ்வோர் உள்ளடக்கத் தரத்திற்கேற்ப தரமான கற்றலையும் அடைவுநிலையையும் நிர்ணயம் செய்வதே கற்றல் தரமாகும்.

**பாடக் குவிவு**

**உயர்நெறி மாந்தர் தன்மை**




*மூலம்: தாமஸ் லிக்கோனா*

i. **நன்னெறிச் சிந்தனை**

நல்லதையும் தீயதையும் முறையானதையும் முறையற்றதையும் பகுத்தாய்ந்து நன்னெறித் தொடர்புடைய சிக்கல்களைச் சுயமாகவும் ஏரணத்தோடும் சரியான நோக்கத்தோடும் களையும் அறிவாற்றலைப் பெற்றிருத்தல்.

ii. **நன்னெறி உணர்வு**

ஒருவர் நற்செயல் புரிந்தால் மகிழ்ச்சி அடையவும் தீயச் செயல் செய்தால் குற்றவுணர்வு அடையவும் தூண்டுகோலாய் அமையும் மனவுணர்வு.

iii. **நன்னெறி நடத்தை**

நன்னெறிச் சிந்தனை மற்றும் நன்னெறி உணர்வு அடிப்படையிலான நடவடிக்கைகளைத் தன்னார்வ முறையிலும் சீரிய கடமை உணர்வோடும் செய்தல்.

**உள்ளடக்க அமைப்பு**

தொடக்கப் பள்ளிகளுக்கான நன்னெறிக் கல்வி தர கலைத்திட்டம் ஆறு கருப்பொருள்களை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆறு கருப்பொருள்களும் நன்னெறிப் பண்புகளை வெளிப்படுத்தும் கருவிகளாகத் திகழ்கின்றன. இக்கருப்பொருள்கள், மாணவர்களுக்கும் சூழலுக்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை. அவை பின்வருமாறு:

| ஆண்டு | கருப்பொருள் |
|---|---|
| 1 | நான் |
| 2 | நானும் குடும்பமும் |
| 3 | நானும் பள்ளியும் |
| 4 | நானும் அண்டை அயலாரும் |
| 5 | நானும் சமூகமும் |
| 6 | நானும் நாடும் |

நன்னெறிப் பண்புகளைத் தொடர்ச்சியாக மாணவர்களிடத்தில் விதைக்க, அதே பண்புக்கூறு ஒவ்வோர் ஆண்டும் ( ஆண்டு 1 முதல் 6 வரை) கற்பிக்கப்படுகிறது. பண்புக்கூறு ஒன்றாகவே இருப்பினும், அதன் கருப்பொருள், வரையறை, பாடப்பொருள் போன்றவை மாணவர்களின் வளர்ச்சிக்கும் அறிவு முதிர்ச்சிக்கும் ஏற்றாற்போல் வேறுபட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளுக்கான நன்னெறிக் கல்வி கலைத்திட்டத்தின் பண்புக்கூறுகள் பின்வருமாறு:

**உள்ளடக்கம்**

**1. இறை நம்பிக்கை**

தேசியக் கோட்பாட்டில் குறிப்பிட்டுள்ளபடி இறைவன் உள்ளார் என்பதிலும் இவ்வுலகைப் படைத்தவர் என்பதிலும் உறுதி கொள்வதோடு அவரது எல்லாக் கட்டளைகளையும் தத்தம் சமய நம்பிக்கைக்கு ஏற்றவாறு பின்பற்றுதல்.

**2. நன்மனம்**

தன்னலம், பிறர் நலம் ஆகியவற்றை உணர்ந்து உளத்தூய்மையுடன் உதவியையும் ஆதரவினையும் வழங்குதல்.

**3. கடமையுணர்வு**

கொடுக்கப்பட்ட பொறுப்புணர்வை ஏற்றுக்கொண்டு அதனைச் செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல்.

**4. நன்றி நவில்தல்**

சேவை, தொண்டு அல்லது உதவி ஆகியவற்றிற்கு உணர்வு, செயல்வழி நன்றி பாராட்டுதல்.

**5. உயர்வெண்ணம்**

அன்றாட வழக்கத்தில் பணிவையும் நன்னடத்தையும் கடைப்பிடித்தல்.

**6. மரியாதை**

தனி மனிதனையும் சமூக அமைப்பையும் மதித்துப் போற்றிப் பண்போடு நடத்துதல்.

**7. அன்புடைமை**

தூய உள்ளத்திலிருந்து நிலையான, ஆழமான அன்பு தோன்றல்.

**8. நீதியுடைமை**

செயல்பாட்டிலும் முடிவெடுத்தலிலும் நடுநிலையோடு செயல்படுதல்.

**9. துணிவு**

சவால்களை மன உறுதியோடும் நம்பிக்கையோடும் எதிர்கொள்ளல்.

**10. நேர்மை**

ஒவ்வொரு செயலிலும் உண்மையும் நாணயமும் உளத்தூய்மையும் கொண்டிருத்தல்.

**11. ஊக்கமுடைமை**

ஒரு செயலைச் செய்வதில் முழுமனத்துடனும் விடாமுயற்சியுடனும் சுறுசுறுப்புடனும் இருத்தல்.

**12. ஒத்துழைப்பு**

அனைவரின் நலனுக்காக ஒன்றிணைந்து செயல்படுதல்.

**13. மிதமான மனப்பான்மை**

தன்னலமும் பிறர் நலமும் பாதிக்காத வகையில் சீர்தூக்கிப் பார்த்து மிதமான போக்கைக் கடைப்பிடித்தல்.

**14. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை**

வளமான வாழ்க்கைக்குப் பொறுமையையும் சுயக்கட்டுப்பாட்டையும் விட்டுக்கொடுக்கும் பண்பையும் கொண்டிருத்தல்.

## நன்னெறிக் கல்வியின் வழி திறன்கள் ஊக்குவிப்பு

### முதன்மைத் திறன்/ முன்னுரை

நன்னெறிக் கல்வியானது மாணவர்கள் ஆக்க ஆய்வு சிந்தனைத் திறன், சிக்கல் தீர்க்கும் திறன், சமூகத் திறன், ஆக்கத் திறன், எதிர்காலவியல் திறன், தகவல் தொடர்பு தொழில் நுட்பத் திறன் போன்ற குறிப்பிட்ட திறன்களைக் கைவரப் பெற வாய்ப்பளிக்கிறது. இத்திறன்களைக் கைவரப் பெறும் மாணவர், தகவல் உலகத்தையும் புதிய நூற்றாண்டையும் நம்பிக்கையோடும் சமூக பொறுப்புணர்வுடனும் நன்னெறிச் சிந்தனை வழியும் எதிர்கொள்ள முடியும். இத்திறன்கள் மாணவர்களின் மன வலிமையை வளர்ப்பதோடு பல்வகை அழுத்தத்தையும் வாழ்க்கை போராட்டத்தையும் எதிர்கொள்ள உதவுகிறது. இத்திறன்களை மாணவர்களுக்குக் கற்றுத் தருவது அவர்களின் உயர்நெறி மாந்தர் தன்மையையும் ஊக்குவித்து வலுப்படுத்தும்.

### சிக்கல் களையும் திறன்

சிக்கலுக்குத் தீர்வு காணும் திறன் மாணவர்கள் தம்மிடமும் பிறரிடமும் உள்ள பண்புக் கூறுகளின் வேறுபாட்டை அறிந்து உலகளாவிய உயர் நெறி பண்புகளின் அடிப்படையில் தீர்க்கமான முடிவு எடுக்க உதவும். இத்திறனைக் கைவரப் பெறுவதன் வழி மாணவர்கள் விளைபயன்மிக்க வகையில் பிறரிடம் நன்முறையில் தொடர்பு கொள்ள முடியும்.

### ஆய்வுச் சிந்தனை

ஆய்வுச் சிந்தனை  மாணவர்கள் தாங்கள் செய்யும் செயலும் முடிவும் நன்னெறிக்குட்பட்டதா இல்லையா என்பதை தாங்களாகவே மதிப்பீடு செய்ய உதவும். இத்திறனைக் கற்பிப்பதன் வழி, உலகளாவிய உயர்நெறி பண்புகளை மாணவர்களின் உள்ளங்களில் விதைக்க இயலும்.இத்திறன் மாணவர்கள் சிக்கலைத்  தீர்த்து ,உயர்நெறியுடன் முடிவெடுக்க துணை புரியும்.

### ஆக்கச் சிந்தனைத் திறன்

இத்திறன் வாழ்க்கையில் சிக்கல் தோன்றும்போது ஆக்கச் சிந்தனையுடன் சிந்தித்து மாற்றுவழி காண உதவுகிறது.

**சக மாணவர்களிடமிருந்து வரும் அழுத்தத்தை எதிர்கொள்ளும் திறன்**

சக மாணவர்களிடமிருந்து வரும் அழுத்தத்தை எதிர்கொள்ளும் திறன் மாணவர்கள் நண்பர்களின் எதிர்மறை தாக்கம், தவறான போதைப்பொருள் பயன்பாடு,பிற குற்றச் செயல்களிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள பயன்படும். இத்திறன், மாணவர்கள் ஏரணமாகச் சிந்திக்கவும் நண்பர்களின் கருத்தினைச் சீர்தூக்கிப் பார்க்கவும் கற்றுத் தருகிறது.

**எதிர்காலவியல் திறன்**

எதிர்காலவியல் என்பது கடந்த கால, நிகழ்கால, எதிர்கால நடப்புகளையும் சிக்கல்களையும் உணரும் வகையில் மேற்கொள்ளப்படும் கற்றல் அணுகுமுறையாகும். இதன்வழி, மாணவர்கள் நடந்தவற்றிலிருந்து நடக்கவிருப்பதை அனுமானித்து அதன் விளைவை ஊகித்து அதற்கேற்ப தங்களைத் தயார்படுத்திக் கொள்வர்.

**தகவல்தொடர்பு தொழில்நுட்பத் திறன்**

இத்திறன் மாணவர்களைத் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் துணைக் கொண்டு இணையம், குறுந்தட்டு, தொலைத் தொடர்பு அமர்வு, ஆகியவற்றின் வாயிலாக ஏற்புடைய தகவல் மூலங்களைத் தேடவும் பெறவும் வாய்ப்பளிக்கிறது. இத்திறன் மாணவர்களின் சிந்தனை வளர்ச்சியைத் தூண்டுகிறது.

**ஆக்கத் திறன்**

ஆக்கத் திறனானது மாணவர்களைப் படைப்புத் திறனும் புத்தாக்கத் திறனும் கொண்டவர்களாக உருவாக்கும். அது மட்டுமின்றி இத்திறன் ஒரு மாணவர் தரம் மிகுந்த கருத்துகளையும் படைப்புகளையும் வெளிப்படுத்த ஏதுவாகிறது. மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் நன்னெறி சார்ந்த தீர்க்க முடியாத சவால்களையும் திறம்பட சமாளிக்க இத்திறன் உதவுகிறது.

**சமூகத் திறன்**

சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழலில் மாணவர்கள் பிறருடன் தொடர்பு கொள்ளும் ஆற்றலை வலியுறுத்துகின்றது. அதே சமயத்தில் இத்திறன் தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்க ஏதுவாய் அமைகிறது.

**உயர்நிலைச் சிந்தனைத்திறன்**

தேசியக் கலைத்திட்டமானது சமன்நிலை, உறுதி மனப்பான்மை, ஆய்ந்தறியும் திறன், கொள்கைப் பிடிப்பு, தகவல் அறிவு, நாட்டுப்பற்று, சிந்தனைத்திறன், தொடர்புத்திறன், இணைந்து செயலாற்றும் திறன் ஆகிய பண்புகளைக் கொண்ட மாணவனை உருவாக்கும் இலக்கைக் கொண்டுள்ளது. மலேசியக் கல்வி மேம்பாட்டுப் பெருந்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள தலைமைத்துவத் திறன், இருமொழி ஆற்றல், ஆன்மீகமும் நெறியும், சமூக அடையாளம், அறிவாற்றல், சிந்தனைத்திறன் ஆகிய ஆறு இலக்குகளும் உலக அளவிலான சவால்களை எதிர்கொள்ளும் ஒவ்வொரு மாணவனும் பெற்றிருக்க வேண்டிய 21ஆம் நூற்றாண்டின் திறன்களாகும்.

1994ஆம் ஆண்டு ஆக்க, ஆய்வுச்சிந்தனையை அறிமுகப்படுத்தியதிலிருந்தே நமது கலைத்திட்டத்தில் சிந்தனைத்திறன் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக உயர்நிலைச் சிந்தனைத்திறன் 2011ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அறிவு, திறன், பண்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சீர்த்தூக்கிப் பார்த்து மீட்டுணர்தல்வழி சிக்கல் களைதல், முடிவெடுத்தல், புத்தாக்கச் சிந்தனையுடன் ஒன்றை உருவாக்குதல் ஆகியவையே உயர்நிலைச் சிந்தனைகளாகக் கருதப்படுகின்றன.

உயர்நிலைச் சிந்தனைத்திறன் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:

| உயர்நிலைச் சிந்தனை | விளக்கம் |
|---|---|
| பயன்படுத்துதல் | அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பொருத்தமான பல்வேறு சூழல்களில் பயன்படுத்தி ஒன்றைச் செய்தல். |
| பகுத்தாய்தல் | தகவலைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அத்தகவலை ஆழமாகப் புரிந்து கொள்வதோடு அதன் பகுதிகளுக்கிடையிலான தொடர்பையும் அறிதல். |
| மதிப்பிடுதல் | அறிவு, அனுபவம், திறன், பண்பு ஆகியவற்றைக் கொண்டு சீர்தூக்கிப் பார்த்தல்; முடிவெடுத்தல்; நியாயப்படுத்துதல். |
| உருவாக்குதல் | பொருள், ஏடல், அணுகுமுறை ஆகியவற்றை ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு உருவாக்குதல். |

இந்தத் திறன் ஒவ்வொரு பாடக் கலைத்திட்டத்திலும் தெரிநிலையாக எழுதப்பட்டுள்ளது. சீர்தூக்கிப் பார்த்தல், கண்டறிதல் வழிக் கற்றல், சிக்கலுக்குத் தீர்வுகாணுதல் ஆகிய நடவடிக்கைகள் வழி உயர்நிலைச் சிந்தனையை வகுப்பறையில் கற்பிக்கலாம். மனவோட்டவரைவு, உயர்நிலைச் சிந்தனைக் கேள்வி போன்றவற்றை ஆசிரியர்களும் மாணவர்களும் சிந்தனைக்கருவிகளாகப் பயன்படுத்திச் சிந்தனைத்திறனை வளர்த்தல் வேண்டும். மாணவர்கள் தங்களுடைய கற்றலுக்குத் தாமே பொறுப்பேற்க வேண்டும் என்ற சிந்தனையையும் உணர்த்துதல் வேண்டும்.

**மதிப்பீடு**

திட்டமிடுதல், தயாரித்தல், நிர்வகித்தல், திருத்துதல், பதிவு செய்தல் மற்றும் ஆசிரியரின் அறிவிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய மதிப்பீடு, மாணவர் பெற்றோர் மற்றும் சமூக அமைப்புகளை உள்ளடக்கியது.

பள்ளி அளவிலான உருவாக்க மதிப்பீடு, பாடத்தின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையோடு ஒரு சேர நடத்தப்படுகிறது. திறள் முறை மதிப்பீடானது பாடத் தொகுதியின் இறுதியிலோ, ஒரு பருவத்தின் இறுதியிலோ அல்லது ஆண்டு இறுதியிலோ நடத்தப்படுகிறது. மதிப்பீடு, கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின் போதே பல்வேறு முறைகளில் தொடர்ச்சியாக நடத்தப்படுகிறது. உற்று நோக்கல், இடுபணி, கள ஆய்வு, திரட்டேடு தயாரித்தல், துணுக்குச் சேகரிப்பு புத்தகம் தயாரித்தல், போல செய்தல், செயல் விளக்கம், புதிர்ப்போட்டி மற்றும் எழுத்துச் சோதனை ஆகியன அவற்றுள் சில.

## பள்ளி அளவிலான மதிப்பீடு

கற்றல் கற்பித்தலில் பள்ளி அளவிலான மதிப்பீடு முக்கியக் கூறாக அமைகிறது. இது மாணவர்களின் கற்றலைத் திடப்படுத்தவும் ஆசிரியரின் கற்பித்தலை மேம்படுத்தவும் துணைபுரிகிறது. இதன் வழி, கற்றல் கற்பித்தலில் நாம் மேற்கொண்ட நடவடிக்கையையும் அடைவுநிலை பற்றியும் ஏற்புடைய விவரங்களைப் பெறமுடிகிறது.

பள்ளி அளவிலான அடைவுநிலைக்கான திட்டமிடல், கேள்வி தயாரித்தல் மதிப்பீட்டுக் கருவி தயாரித்தல், நிர்வாகம், தேர்வு, மதிப்பு எண், பதிவு, அறிக்கை தயாரித்தல் ஆகிய கூறுகள் ஆசிரியர்களாலும் பள்ளி நிர்வாகத்தினராலும் முழுமையாக அமல்படுத்தப்படுகிறது. இயைபும் சமச்சீர் மாந்தரை உருவாக்குவதில் பள்ளி மற்றும் ஆசிரியர்களின் விளைபயனை உறுதிசெய்வதற்கு இந்தப் பள்ளி அளவிலான மதிப்பீடு அத்தியாவசியமாகிறது. பள்ளி அளவிலான மதிப்பிடல் என்பது மாணவரின் ஆற்றல் மிக உயரிய நிலையை அடைய பள்ளி நிர்வாகத்தினரும் ஆசிரியர்களும் முழு ஈடுபாட்டுடனும் தெளிவான நோக்கத்துடனும் மேற்கொள்ளும் தொடர் நடவடிக்கையாகும்.

## தர அடைவு

தர அடைவு என்பது தரக்கூற்று அடிப்படையில் அமைந்த மாணவர்களின் கற்றல் வளர்ச்சிப் படிநிலைகள் பற்றிய கூற்றாக விளங்கும். அதே வேளையில் கற்றலின் வளர்ச்சியில் அல்லது மேம்பாட்டில் மாணவரின் இடவமைவைக் காட்டக் கூடியதாகவும் இருக்கும். தரக்கூற்றின் வளர்ச்சி கிடைநிலை ( உருவாக்கம் ) செங்குத்து நிலை ( கட்டு ) இரு வகைப்படும். மாணவரின் வளர்ச்சியை கற்றல்பேறு வடிவில் தரக்கூற்றை விவரிக்கும் சரியான சொல் அல்லது சொற்றொடர்களைக் கொண்டு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அளவீடுகளால் விளக்கப்படும்.

### பொதுக்கட்டு விளக்கம்

| அடைவுநிலை | விளக்கம் |
|---|---|
| 1 | மாணவர்கள், அடிப்படைக் கூறுகளை அறிந்திருப்பர் அல்லது அடிப்படைத் திறன்களை நிறைவேற்றுவர் அல்லது அடிப்படைக் கூறுகளுக்கு ஏற்பத் துலங்குவர். |
| 2 | மாணவர்கள் தொடர்புமுறையை மாற்றியமைப்பதில் புரிதலை வெளிப்படுத்துவர் அல்லது கற்றவற்றைப் பொருள்பெயர்ப்புச் செய்யவும் தெளிவுபடுத்தவும் செய்வர். |
| 3 | மாணவர்கள், குறிப்பிட்ட ஒரு சூழலில் குறிப்பிட்ட ஒரு திறனைச் செயல்படுத்த அறிவாற்றலைப் ( அறிதலை ) பயன்படுத்துவர். |
| 4 | மாணவர்கள், சரியான முறைமை அல்லது நடைமுறைக்கு ஏற்றவாறு குறிப்பிட்ட ஒரு திறனைப் பண்புடன் செயல்படுத்துவர். |
| 5 | மாணவர்கள், சரியான முறைமை அல்லது நடைமுறைக்கு ஏற்றவாறும் நிலைத்தன்மையோடும் நேர்மறைத் தன்மையோடும் புதிய சூழலில் குறிப்பிட்ட ஒரு திறனைச் செயல்படுத்துவர். |
| 6 | மாணவர்கள், ஆக்கமானதும் புத்தாக்கமானதுமான ஏடல்களைச் செயலாக்கம் செய்வர்; அன்றாட வாழ்வின் சவால்களையும் கோரிக்கைகளையும் சமாளிப்பதற்கான முடிவெடுக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு பொருத்தமான வாக்கியங்களைப் பண்புடன் பயன்படுத்தித் தகவல்களைப் பெறவும் பரிமாறவும் கலந்துரையாடும் ஆற்றலையும் கொண்டிருப்பர்; நிலைப்பாடான முன்மாதிரியாகவும் ஆகுவர். |

அடைவு நிலை என்பது தனிநபர் தொடர்பான நோக்கமாகக் கொண்டு நிரல்படி வகுக்கப்பட்ட குறிப்பிட்ட படிநிலை குறியீட்டைக் காட்டப் பயன்படுத்தப்படும் ஒரு குறிப்பு ஆகும். தரம் என்பது ஒரு தனி நபரை முழுமையாகப் பிரதிபலிக்க பொதுப்படையான மற்றும் குறிப்பிட்ட வரையளவைக் உணர்த்தும் அறிவுப்புலம் பற்றிய ஒரு கூற்றாகும்.

## நன்னெறிப்பாடத்திற்கான பொதுக் கட்டு விளக்கம்

| அடைவு நிலை | விளக்கம் |
|---|---|
| 1 | குறிப்பிட்ட நன்னெறிப் பண்பினை அறிந்திருப்பர். |
| 2 | கற்ற நன்னெறிப் பண்பினைப் புரிந்து தெளிவுபடுத்துவர். |
| 3 | கற்ற நன்னெறிப் பண்பினைக் குறிப்பிட்ட சூழலில் வழிகாட்டுதலுடன் பயன்படுத்துவர் |
| 4 | கற்ற நன்னெறிப் பண்பினைப் பல்வேறு சூழல்களில் வழிகாட்டுதலின்றிப் பயன்படுத்துவர் |
| 5 | கற்ற நன்னெறிப் பண்பினை அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிப்பர் |
| 6 | கற்ற நன்னெறிப் பண்பினை அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிப்பர்; முன்மாதிரி ஆகுவர். |

## ஆண்டு 6 உள்ளடக்கத் தரமும் தர அடைவும்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| 1. **இறை நம்பிக்கை**<br><br>தேசியக் கோட்பாட்டில் குறிப்பிட்டுள்ளபடி இறைவன் உள்ளார் என்பதிலும் இவ்வுலகைப் படைத்தவர் என்பதிலும் உறுதி கொள்வதோடு அவரது எல்லாக் கட்டளைகளையும் தத்தம் சமய நம்பிக்கைக்கு ஏற்றவாறு பின்பற்றுதல்.<br><br>**1.1 நாட்டின் சுபீட்சத்திற்காக இறைக் கட்டளைகளை நிறைவேற்றல்** | 1.1.1 நாட்டின் நல்லிணக்கம் சமய போதனை மற்றும் நம்பிக்கைகளை விளக்குவர்.<br><br>1.1.2 நாட்டின் நல்லிணக்கம் தொடர்பான இறைக் கட்டளைகளில் உள்ள நன்மைகளை விளக்குவர்.<br><br>1.1.3 நாட்டின் நல்லிணக்கத்திற்காக இறை கட்டளைகளைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறுவர்.<br><br>1.1.4 நாட்டின் தேசிய நல்லிணக்கத்திற்காகக் கடவுள் போதனைகளை அமல்படுத்துவர். | 1 | மாணவர்கள் இறை வழிபாட்டினைச் செயல்படுத்துவதன் முறைகளைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் நாட்டின் நல்லிணக்கத்திற்காக இறை வழிபாட்டினைச் செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் நாட்டின் நல்லிணக்கத்திற்காக இறை வழிபாட்டினைச் செயல்படுத்துவதை வழிகாட்டுதலுடன் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் நாட்டின் நல்லிணக்கத்திற்காக இறை வழிபாட்டினை நடைமுறைப்படுத்துவர். |
| | | 5 | மாணவர்கள் நாட்டின் நல்லிணக்கத்திற்காக அன்றாட வாழ்வில் இறை வழிபாட்டினைச் செயல்படுத்துவர். |
| | | 6 | மாணவர்கள் நாட்டின் நல்லிணக்கத்திற்காக அன்றாட வாழ்வில் இறை வழிபாட்டினைச் செயல்படுத்துவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| **2. நன்மனம்**<br><br>தன்னலம், பிறர் நலம் ஆகியவற்றை உணர்ந்து உளத்தூய்மையுடன் உதவியையும் ஆதரவினையும் வழங்குதல்.<br><br>**2.1 நாட்டின் சுபீட்சத்திற்காகத் தேவைப்படுவோர்க்கு உதவுதல்** | 2.1.1 தேவை ஏற்படுவோருக்கு உதவும் வழிகளை வகைப்படுத்துவர். *(பொருள் மற்றும் தார்மீக ஆதரவு)*<br><br>2.1.2 தேவை ஏற்படுவோருக்கு உதவுவதால் ஏற்படும் நன்மைகளை விவரிப்பர்.<br><br>2.1.3 தேவைப்படுவோருக்கு உதவி வழங்கும்போது ஏற்படும் மனவுணர்வுகளை வெளிப்படுத்துவர்.<br><br>2.1.4 தேவைப்படுவோருக்கு உதவும் மனப்பாங்கைச் செயல்படுத்துவர். | 1 | மாணவர்கள் தேவை ஏற்படுவோருக்கு உதவும் வழிகளைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் தேவை ஏற்படுவோருக்கு உதவுவதால் ஏற்படும் நன்மைகளை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் தேவை ஏற்படுவோருக்கு உதவும் வழிகளை வழிகாட்டலுடன் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் தேவை ஏற்படுவோருக்கு உதவும் வழிகளைச் செய்து காட்டுவர். |
| | | 5 | மாணவர்கள் அன்றாட வாழ்கையில் தேவை ஏற்படுவோருக்கு உதவும் மனப்பாங்கைச் செயல்படுத்துவர். |
| | | 6 | மாணவர்கள் அன்றாட வாழ்கையில் தேவை ஏற்படுவோருக்கு உதவும் மனப்பாங்கைச் செயல்படுத்துவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| **3. கடமையுணர்வு**<br><br>கொடுக்கப்பட்ட கடமைகளையும் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு அதனைச் முழுமையாகச் செய்து முடிக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல்<br><br>**3.1 நாட்டுக்காகக் கடமைகளை நிறைவேற்றல்** | 3.1.1 நாட்டில் நன்னெறிப்பண்புகள் தொடர்பாக நடத்தப்பட்ட பிரச்சாரங்களைப் பற்றி விளக்குவர்.<br><br>3.1.2 நாட்டில் நன்னெறிப்பண்புகள் தொடர்பாக நடத்தப்பட்ட பிரச்சாரங்களை ஆதரிக்கும் வழிகள் பற்றிக் கருத்துரைப்பர்.<br><br>3.1.3 நாட்டில் நன்னெறிப்பண்புகள் தொடர்பாக நடத்தப்பட்ட பிரச்சாரங்களில் பங்கேற்கையில் ஏற்படும் மனவுணர்வுகளை வெளிப்படுத்துவர்<br><br>3.1.4 நாட்டில் நன்னெறிப்பண்புகள் தொடர்பாக நடத்தப்பட்ட பிரச்சாரங்களில் தம் பொறுப்புகளைச் செயல்படுத்துவர். | 1 | மாணவர்கள் நாட்டிற்காக ஆற்ற வேண்டிய கடமைகளைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் நாட்டிற்காக ஆற்ற வேண்டிய கடமைகளின் முக்கியத்துவத்தை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் நாட்டிற்காக ஆற்ற வேண்டிய கடமைகளை வழிகாட்டலுடன் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் நாட்டிற்காக ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்து காட்டுவர். |
| | | 5 | மாணவர்கள் அன்றாட வாழ்கையில் நாட்டிற்காக ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவர். |
| | | 6 | மாணவர்கள் அன்றாட வாழ்கையில் நாட்டிற்காக ஆற்ற வேண்டிய கடமைகளைச் செயல்படுத்துவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

<table>
<tr><th>உள்ளடக்கத் தரம்</th><th>கற்றல் தரம்</th><th>தர அடைவு</th><th>தர விளக்கம்</th></tr>
<tr><td rowspan="6">4. நன்றி நவில்தல்<br><br>சேவை, தொண்டு அல்லது உதவி ஆகியவற்றிற்கு உணர்வு, செயல்வழி நன்றி பாராட்டுதல்.<br><br>4.1 நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பையும் தியாகங்களையும் போற்றுதல்</td><td rowspan="6">4.1.1 நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பையும் தியாகங்களையும் பற்றி விவரிப்பர்.<br><br>4.1.2 நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பினாலும் தியாகங்களினாலும் ஏற்பட்ட விளைவுகளை விளக்குவர்.<br><br>4.1.3 நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பையும் தியாகங்களையும் மதிக்கையில் ஏற்படும் மனவுணர்வுகளை வெளிப்படுத்துவர்.<br><br>4.1.4 நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பையும் தியாகங்களையும் உயர்வாக மதித்தல்.</td><td>1</td><td>மாணவர்கள் நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பு மற்றும் தியாகங்களைக் கூறுவர்.</td></tr>
<tr><td>2</td><td>மாணவர்கள் நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பு மற்றும் தியாகங்களின் முக்கியத்துவத்தை விவரிப்பர்.</td></tr>
<tr><td>3</td><td>மாணவர்கள் நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பு மற்றும் தியாகங்களை மதிப்பதை வழிகாட்டலுடன் செய்து காட்டுவர்.</td></tr>
<tr><td>4</td><td>மாணவர்கள் பல்வேறு சூழல்களில் நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பு மற்றும் தியாகங்களை மதிப்பது போன்று செய்து காட்டுவர்.</td></tr>
<tr><td>5</td><td>மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பு மற்றும் தியாகங்களை மதிக்கும் வகையில் செயல்படுவர்.</td></tr>
<tr><td>6</td><td>மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் நாட்டின் பிரபலமானவர்களின் பங்களிப்பு மற்றும் தியாகங்களை மதிக்கும் வகையில் செயல்படுவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர்.</td></tr>
</table>

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| **5. உயர்வெண்ணம்**<br>அன்றாட வழக்கத்தில் பணிவையும் நன்னடத்தையையும் கடைப்பிடித்தல்<br><br>**5.1 சேவையைப் பெறுகையில் நன்னடத்தையைக் கடைப்பிடித்தல்** | 5.1.1 சேவைகள் பெறுகையில் நன்னடத்தையைக் கடைபிடிக்கும் வழிகளை விவரிப்பர்.<br><br>5.1.2 சேவைகள் பெறுகையில் நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவர்.<br><br>5.1.3 சேவைகள் பெறுகையில் நன்னடத்தையைக் கடைபிடிக்கும் போது ஏற்படும் மனவுணர்வை முன்வைப்பர்.<br><br>5.1.4 சேவைகள் பெறுகையில் நன்னடத்தையை வெளிப்படுத்துவர். | 1 | மாணவர்கள் சேவைகள் பெறுகையில் நன்னடத்தையைக் கடைப்பிடிக்கும் வழிகளைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் சேவைகள் பெறுகையில் நன்னடத்தையைக் கடைப்பிடிக்கும் வழிகளின் முக்கியத்துவத்தை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் சேவைகள் பெறுகையில் நன்னடத்தையைக் கடைப்பிடிக்கும் வழிகளை வழிகாட்டலுடன் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் சேவைகள் பெறுகையில் நன்னடத்தையைக் கடைப்பிடிக்கும் வழிகளைச் செய்து காட்டுவர். |
| | | 5 | மாணவர்கள் அன்றாட வாழ்கையில் சேவைகள் பெறுகையில் நன்னடத்தையைக் கடைப்பிடிப்பர். |
| | | 6 | மாணவர்கள் அன்றாட வாழ்கையில் சேவைகள் பெறுகையில் நன்னடத்தையைக் கடைப்பிடிப்பர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| **6. மரியாதை**<br><br>தனி மனிதரையும் சமூக அமைப்பையும் மதித்துப் போற்றிப் பண்போடு நடத்துதல்<br><br>**6.1 நாட்டினை மதித்தல்** | 6.1.1 நாட்டை மதிக்கும் வழிகளை விவரிப்பர்.<br><br>6.1.2 நாட்டை மதிப்பதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவர்.<br><br>6.1.3 நாட்டை மதிக்கையில் ஏற்படும் மனவுணர்வுகளை விளக்குவர்.<br><br>6.1.4 நாட்டை மதிக்கும் பண்பினைச் செயல்படுத்துவர். | 1 | மாணவர்கள் நாட்டை மதிக்கும் வழிகளைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் நாட்டை மதிப்பதன் முக்கியத்துவத்தை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் வழிகாட்டலுடன் நாட்டை மதிக்கும் வழிகளைச் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் நாட்டை மதிக்கும் வழிகளைச் செய்து காட்டுவர். |
| | | 5 | மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் நாட்டை மதிக்கும் வழியில் செயல்படுவர். |
| | | 6 | மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் நாட்டை மதிக்கும் வழியில் செயல்படுவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

<table>
<tr><th>உள்ளடக்கத் தரம்</th><th>கற்றல் தரம்</th><th>தர அடைவு</th><th>தர விளக்கம்</th></tr>
<tr><td rowspan="6">7. அன்புடைமை<br><br>தூய உள்ளத்திலிருந்து ஆழமான, நிலையான அன்பு தோன்றல்<br><br>7.1 நாட்டின் சுபீட்சத்திற்காகச் சுற்றுச்சூழல் மேல் அன்பு வைத்தல்</td><td rowspan="6">7.1.1 நாட்டின் சுபீட்சத்திற்காக சுற்றுச்சூழல் மேல் அன்பு செலுத்தும் வழிகளை விளக்குவர்.<br><br>7.1.2 நாட்டின் சுபீட்சத்திற்காகச் சுற்றுச்சூழல் மேல் அன்பு செலுத்துவதன் முக்கியத்துவத்தைச் சுருக்கிக் கூறுதல்.<br><br>7.1.3 நாட்டின் சுபீட்சத்திற்காகச் சுற்றுச்சூழல் மேல் அன்பு செலுத்துகையில் தோன்றும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br><br>7.1.4 நாட்டின் சுபீட்சத்திற்காகச் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.</td><td>1</td><td>மாணவர்கள் சுற்றுச்சூழலை நேசிப்பதன் பொருளைக் கூறுவர்.</td></tr>
<tr><td>2</td><td>மாணவர்கள் சுற்றுச்சூழலை நேசிப்பதன் முக்கியத்துவத்தை விவரிப்பர்.</td></tr>
<tr><td>3</td><td>மாணவர்கள் சுற்றுச்சூழலை நேசிக்கும் வழிமுறைகளை வழிகாட்டுதலுடன் செய்து கட்டுவர்.</td></tr>
<tr><td>4</td><td>மாணவர்கள் பல்வேறு சூழல்களில் சுற்றுச்சூழலை நேசிக்கும் வழிமுறைகளைச் செய்து காட்டுவர்.</td></tr>
<tr><td>5</td><td>மாணவர்கள் அன்றாட வாழ்வில் சுற்றுச்சூழலை நேசிக்கும் பண்பினைச் செயல்படுத்துவர்.</td></tr>
<tr><td>6</td><td>மாணவர்கள் அன்றாட வாழ்வில் சுற்றுச்சூழலை நேசிக்கும் பண்பினைச் செயல்படுத்துவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர்.</td></tr>
</table>

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| **8. நீதியுடைமை**<br><br>செயல்பாட்டிலும் முடிவெடுத்தலிலும் நடுநிலையோடு செயல்படுதல்<br><br>**8.1 நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமையைக் கடைப்பிடித்தல்** | 8.1.1 நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமையைக் கடைப்பபிடிக்கும் வழிகளை விவரிப்பர்.<br><br>8.1.2 நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமைப் பண்பினைக் கடைப்பிடிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குவர்.<br><br>8.1.3 நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமையைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br><br>8.1.4 நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமைப் பண்பினைச் செயல்படுத்துவர். | 1 | மாணவர்கள் நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமையைக் கடைபிடிப்பதன் பொருளைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமையைக் கடைபிடிப்பதன் அவசியத்தை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமை பண்பினைக் கடைப்பிடிக்கும் முறையை வழிகாட்டலுடன் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழலில் நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமைமை பண்பைக் கடைப்பிடிக்கும் முறையை செய்து காட்டுவர். |
| | | 5 | மாணவர்கள் அன்றாட வாழ்கையில் நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமை பண்பைச் செயல்படுத்துவர். |
| | | 6 | மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் நாட்டின் சுபீட்சத்திற்காக நடுநிலைமை பண்பைச் செயல்படுத்துவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| **9. துணிவு**<br><br>சவால்களை மன உறுதியோடும் நம்பிக்கையோடும் எதிர்கொள்ளல்<br><br>**9.1 நாட்டின் நற்பெயரை நிலைநாட்டுதல்.** | 9.1.1 நாட்டின் நற்பெயரை நிலைநாட்டும் வழியைப் பரிந்துரைப்பர்.<br><br>9.1.2 நாட்டின் நற்பெயரை நிலைநாட்ட வேண்டியதன் முக்கியத்துவத்தை விவரிப்பர்.<br><br>9.1.3 நாட்டின் நற்பெயரை நிலைநாட்டுகையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br><br>9.1.4 நாட்டின் நற்பெயரை நிலைநாட்டிடத் துணிவுடன் செயல்படுவர். | 1 | மாணவர்கள் நாட்டின் நற்பெயரை நிலைநாட்டும் வழியைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் நாட்டின் நற்பெயரை நிலைநாட்ட வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கூறுவர். |
| | | 3 | மாணவர்கள் நாட்டின் நற்பெயரை நிலைநாட்டும் வழியை வழிகாட்டலுடன் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் நாட்டின் நற்பெயரை நிலைநாட்டும் பண்பைச் செய்து காட்டுவர். |
| | | 5 | மாணவர்கள் அன்றாட வாழ்கையில் நாட்டின் நற்பெயரை நிலைநாட்டிடச் செயல்படுவர். |
| | | 6 | மாணவர்கள் அன்றாட வாழ்கையில் நாட்டின் நற்பெயரை நிலைநாட்டிடச் செயல்படுவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| **10. நேர்மை**<br><br>ஒவ்வொரு செயலிலும் உண்மையும் நாணயமும் உளத்தூய்மையும் கொண்டிருத்தல்<br><br>**10.1 நாட்டின் நல்லிணக்கத்திற்காக நேர்மை மனப்பான்மையைக் கடைப்பிடித்தல்** | 10.1.1 நாட்டின் நல்லிணக்கத்திற்கான நேர்மைப் பண்பின் உதாரணங்களை வெளிப்படுத்துதல்.<br><br>10.1.2 நாட்டின் நல்லிணக்கத்திற்காக நேர்மை மனப்பான்மையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பட்டியலிடுவர்.<br><br>10.1.3 நாட்டின் நல்லிணக்கத்திற்காக நேர்மையுடன் நடந்துகொள்கையில் ஏற்படும் மனவுணர்வைக் கூறுவர்.<br><br>10.1.4 நாட்டின் நல்லிணக்கத்திற்காக நேர்மை மனப்பான்மையைச் செயல்படுத்துவர். | 1 | மாணவர்கள் நாட்டின் நல்லிணக்கத்திற்காக நேர்மையாக நடந்து கொள்வதன் பொருளை அறிந்து கொள்வர். |
| | | 2 | மாணவர்கள் நாட்டின் நல்லிணக்கத்திற்காக நேர்மை மனப்பான்மையைச் செயல்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் நாட்டின் நல்லிணக்கத்திற்காக நேர்மை மனப்பான்மையைச் செயல்படுத்தும் வழிமுறைகளை வழிகாட்டுதலுடன் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் நாட்டின் நல்லிணக்கத்திற்காக நேர்மை மனப்பான்மையைச் செயல்படுத்தும் முறைகளைச் செய்து காட்டுவர். |
| | | 5 | மாணவர்கள் நாட்டின் நல்லிணக்கத்திற்காக அன்றாட வாழ்வில் நேர்மை மனப்பான்மையைச் செயல்படுத்துவர். |
| | | 6 | மாணவர்கள் நாட்டின் நல்லிணக்கத்திற்காக அன்றாட வாழ்வில் நேர்மை மனப்பான்மையைச் செயல்படுத்துவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| 11. **ஊக்கமுடைமை**<br><br>ஒரு செயலைச் செய்வதில் விடாமுயற்சியுடனும் முழுமனத்துடனும் சுறுசுறுப்புடனும் இருத்தல்<br><br>**11.1 நாட்டின் முன்னேற்றத்திற்காக ஊக்கமுடைமையைக் கடைப்பிடித்தல்** | 11.1.1 நாட்டின் முன்னேற்றத்திற்காக ஊக்கமுடைமையைக் கடைப்பிடிக்கும் முறையை விவரிப்பர்.<br><br>11.1.2 நாட்டின் முன்னேற்றத்தையும் சுறுசுறுப்பையும் தொடர்புபடுத்துவர்.<br><br>11.1.3 நாட்டின் முன்னேற்றத்திற்காக ஊக்கமுடைமையை வெளிப்படுத்துகையில் ஏற்படும் மனவுணர்வை உரைப்பர்.<br><br>11.1.4 நாட்டின் முன்னேற்றத்திற்காக ஊக்கமுடைமையை மெய்ப்பிப்பர். | 1 | மாணவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஊக்கமுடைமையைக் கடைப்பிடிக்கும் பண்புகளைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஊக்கமுடைமையைக் கடைப்பிடிக்கும் முறையை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஊக்கமுடைமையைக் கடைப்பிடிக்கும் முறையை வழிகாட்டலுடன் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஊக்கமுடைமையைக் கடைப்பிடிக்கும் முறையைச் செய்து காட்டுவர். |
| | | 5 | மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஊக்கமுடைமையைச் செயல்படுத்துவர். |
| | | 6 | மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஊக்கமுடைமையைச் செயல்படுத்துவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| 12. **ஒத்துழைப்பு**<br>அனைவரின் நலனுக்காக ஒன்றிணைந்து செயல்படுதல்<br><br>12.1 **அனைவரின் நன்மைக்காக ஒத்துழைத்தல்** | 12.1.1 அனைவரின் நன்மைக்காக ஒத்துழைத்தலின் எடுத்துக்காட்டுகளை மனவோட்டவரையின் துணையுடன் விவரிப்பர்.<br><br>12.1.2 அனைவரின் நன்மைக்காக ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தைக் கூறுவர்.<br><br>12.1.3 அனைவரின் நன்மைக்காக இணைந்து செயலாற்றக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்கையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br><br>12.1.4 அனைவரின் நன்மைக்காக நடைபெறும் நடவடிக்கைகளில் ஒத்துழைக்கும் வண்ணம் பங்கெடுப்பர். | 1 | மாணவர்கள் ஒத்துழைப்போடு செயல்படும் வழிகளைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் அனைவரின் நன்மைக்காக ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் அனைவரின் நன்மைக்காக ஒத்துழைக்கும் வழிகளை வழிகாட்டுதலுடன் செய்து கட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் அனைவரின் நன்மைக்காக ஒத்துழைப்பைச் செயலாற்றும் வழிகளைச் செய்து கட்டுவர். |
| | | 5 | மாணவர்கள் அன்றாட வாழ்வில் அனைவரின் நன்மைக்காக ஒத்துழைப்பைச் செயல்படுத்துவர். |
| | | 6 | மாணவர்கள் அன்றாட வாழ்வில் அனைவரின் நன்மைக்காக ஒத்துழைப்பைச் செயல்படுத்துவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| 13. **மிதமான மனப்பான்மை**<br><br>தன்னலமும் பிறர் நலமும் பாதிக்காத வகையில் சீர்தூக்கிப் பார்த்து மிதமான போக்கைக் கடைப்பிடித்தல்<br><br>**13.1 கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்தல் (சேவைகள்)** | 13.1.1 கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்தும் வழிகளைப் படைப்பர்.<br><br>13.1.2 கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை முன் வைப்பர்.<br><br>13.1.3 கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்தும்போது ஏற்படும் மனவுணர்வைக் கூறுவர்.<br><br>13.1.4 கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்துவதை அமல்படுத்துவர். | 1 | மாணவர்கள் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்தும் வழிகளைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்தும் வழிகளை வழிகாட்டலுடன் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்தும் வழிகளைச் செய்து காட்டுவர். |
| | | 5 | மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்துவர். |
| | | 6 | மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை முறையாகப் பயன்படுத்துவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | தர விளக்கம் |
|---|---|---|---|
| 14. **விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை**<br><br>வளமான வாழ்க்கைக்குப் பொறுமையையும் சுயக்கட்டுப்பாட்டையும் விட்டுக்கொடுக்கும் பண்பையும் கொண்டிருத்தல்<br><br>**14.1 நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடித்தல்.** | 14.1.1 நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுக்கும் வழிகளைக் கலந்துரையாடுவர். (கொண்டாட்டம் / வழிபாடு / தேசிய அளவிலான கொண்டாட்டம்)<br><br>14.1.2 நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுப்பதால் விளையும் நன்மைகளை விவரிப்பர்.<br><br>14.1.3 நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுக்கையில் ஏற்படும் மனவுணர்வைத் தெளிவுபடுத்துவர்.<br><br>14.1.4 நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைச் செயல்படுத்துவர். | 1 | மாணவர்கள் நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுக்கும் வழிகளைக் கூறுவர். |
| | | 2 | மாணவர்கள் நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின் முக்கியத்துவத்தை விவரிப்பர். |
| | | 3 | மாணவர்கள் நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைச் செயல்படுத்தும் வழிமுறைகளை வழிகாட்டுதலுடன் செய்து காட்டுவர். |
| | | 4 | மாணவர்கள் பல்வேறு சூழல்களில் நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைச் செயல்படுத்துவர். |
| | | 5 | மாணவர்கள் அன்றாட வாழ்வில் நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைச் செயல்படுத்துவர். |
| | | 6 | மாணவர்கள் அன்றாட வாழ்வில் நாட்டின் சுபீட்சத்திற்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைச் செயல்படுத்துவர்; முன்னுதாரணமாகத் திகழ்வர். |